**செ. கு. எண்**:235 **நாள்**:05-12-2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 5 .12. 2011

தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருவதன் காரணமாக திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திசையன்விளை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுடலைமணி என்பவரது மகன் திரு. முருகன் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், சொக்கம்பழம்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. அசோக்குமார் என்பவரின் மகன் சேது முத்துராமலிங்கம் ஆகியோர் ஆற்றில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்தனர் என்ற செய்தியையும்,

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், குல்லூர்சந்தை கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆண்டி என்பவரது மனைவி திருமதி தனம் சுவர் இடிந்து விழுந்ததால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பெரியநரிமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. பிரபு **29.11.2011** அன்று ஆற்று தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டு அவரது சடலம் **3.12.2011** அன்று கிடைக்கப் பெற்றது என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

மழை காரணமாக பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த இந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.



**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**